உ

முருகன் துணை.

பழனி தண்டாயுதபாணி மீது

பக்திரசக் கீர்த்தனை

திருத்தங்கல் ஆறுமுகத் தம்பிரான்

அதியற்புத திருவிளையாடல்

காவடிச்சிந்து.

இஃது

திருத்தங்கல் நாட்டாண்மை மகா-ா-ா-ஸ்ரீ

சிவகோடி நாடாரவர்கள் குமாரர்

வெள்ளைச்சாமி நாடாரவர்கள்

பிரயத்தனத்தால், தம்பிரான் சகாக்களின்

பொருளுதவியால்,

சின்னையாபுரம், மேலக்கோட்டையூர்,

பா. ச. வே. ரவி. எமி.

சங்கரலிங்க தாஸரவர்களால்,

இயற்றி, ஷ யாரால்,

சச்சிதானந்தம் பிரஸிற்,

பிக்கப்பெற்றது.

1931. [அணா 8.

Q26:417
N31
186167

தங்கி அபிஷேகம்செய்து பிறகு அங்கராத்தில் காவடி விளையாண்டு அதிகாலையில் பூசை தீபஆராதனை காட்டி புறப்பட்டு பாவாலிக்கிராமம் சுத்தி விளையாடுகிறது. பழனிக்கு ஆறுமுகத்தம்பிரான் ஒரு காலினால் அம்பரமாக மூன்றுநாள் பிரயாணத்தை 12-மணியிலிருந்து 6-மணிக்குள் கோவில் செல்லுகிற விஸ்தீரமும், தன் உடன் பிறந்த சகோதரி வீரலட்சுமியம்மாள் காவடியைச்சேர்த்துப் பிடிக்க இரண்டு பேரையும் காவடி தூக்கிக்கொண்டு சுமார் தரைக்குமேல் 1-அடி உயரம் தூக்கிக்கொண்டு பறந்து சென்றது. செல்லுங்கால் ஆற்றில் தண்ணீர் மறித்துக்கொள்ள மற்ற அநேக காவடிகள் செல்லாதிருக்க தம்பிரான் காவடி வெள்ளத்தில் பறந்து சென்றது. செல்லுங்கால் இவர் காவடியன்னியில் வேறு காவடிக்கி அபிஷேகம் நடத்தியதால் தம்பிரான் தனது நாவை அறுத்து கீழே எறிந்தனர் உடனே முருகன் ஆலயஅபிஷேகதாரி நாவை ஒரு சிறியஇலையில் எடுத்து வைத்து அதற்குத்தண்ணீர் வார்த்தனர் நாக்கு தானே கரையவும் தம்பிரானுக்கு நாவு தானே வளர்ந்தது. தெய்வ ஆவேசம் உண்டாகி பால் தானே பொங்கியது. உடனே தம்பிரான் உள்ளத்தில் ரகஸ்யமாய் முருகன் திருவாய் மலர்ந்தருளிய விஷயம் யாதெனில் தம்பிரான் உனது அன்பின் அருள்நோக்கத்தை நிர்வகிக்க என்னால் முடிகிறதில்லை, நீ உன் சொந்தநகரத்தில் ஆலயம்எடுப்பித்து அபிஷேக ஆராதனை நடப்பித்தாயானால் நான் அவிடத்திலேயே ஏற்றுக்கொள்வேனென்று திருவாய் மலர்ந்தருளினர். தம்பிரான் சுவாமி ஆலயம்எடுப்பதற்கு என்னிடத்தில் பொருளில்லையென கேட்க சுவாமி உத்திரவாகியது நீஉன்சகாக்களுடன் திரும்பிச்செல்லுகிறபோது இடவழியில் ஒரு புளியந்தோப்பில் பந்திபோஜனம் நடத்துவதற்காக சமையல் ஆரம்பிக்குமிடத்தில் உன் தங்கை வீரலட்சுமியம்மாள் உனக்கு விரதசமையல் நடத்துவதற்காக அடுப்பிட்டுமுடித்த ஒருசிற்றடுப்பில் வேண்டிய திரவியமிருக்கிறது அதை எடுத்து ஆலயம் கெட்டிக்கொள்ளென்று திருவாய்மலர்ந்தருளினர். அதேபிரகாரம் தம்பிரான் வந்து புளியந்தோப்பில்சமையல்செய்து பொருளை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். முன் பந்திபோஜனத்தில் கூடவேயிருந்து போசனமருந்திய 2-திருடர்கள் இவர் பணப்புதையலெடுத்ததைக் கண்டு பொறாமைகொண்டு திருடர்கள் அநேகம்பேர்களைத் திரட்டி வந்து

தம்பிரானிடத்தில் நீ எடுத்துக்கொண்டு போகும் புதையல் பொருளைக்கொடு கொடுக்காவிட்டால் உங்கள் ஜனங்களின் நகை நாணயங்களைப் பறித்துக் கொண்டு செல்லுவோமென்று வற்புறுத்தினர் தம்பிரான் சடாக்ஷாத்தைத் தியானித்து கள்ளர்கள்மீது விபூதியை வாறியெறிந்தனர் உடனே திருடர்கள் நேத்திரம் ஒளிமழுங்கலாகி அவர்களை இருள்வந்து கவர்ந்தாற்போலாகியது அப்போதே திருடர்கள் தம்பிரானை மிகவணக்கத்துடன் பணிந்து தம்பிரானே நாங்கள் அறியாது செய்த பிழைகளைப் பொருத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர் தம்பிரான் கிருபைகொண்டு அடா திருடர்களே உங்களுக்கு நேத்திரம் சொஸ்தமானால் நீங்கள் பரோபகாரம் செய்வ[illegible]தெனக்கேள்க்க திருடர்கள் கூறியதாவது. சுவாமி நாங்கள் யாது செய்யவேண்டிய தொண்டோ அதைச் செய்துமுடிக்கிறோமென தம்பிரான் கூறியது நீங்கள் கள்ளர்மடமென்று கட்டி ஏழைகளுக்கு அன்னம் நீர்ப்பாகம் முதலியவைகளைவைத்துநடத்தவேண்டுமென்றனர். தம்பிரான் திருவாக்கின்பிரகாரம் கட்டிமுடித்து இப்பொழுதும் அன்னம் நீர்மோர் முதலிய தருமம் நடந்துவருகிறது. ஷை தம்பிரான் தன் சொந்த நகரமாகிய ஐந்தாம்திருப்பதி என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் மலைமீது சுப்பிரமணியக்கடவுள் ஆலயம் முடித்து அபிஷேக ஆராதனை முதலியதும் மலைமீது காவடிகொண்டு சேர்த்து தெய்வகைங்கரியம் யாவையும் மாசரப் பூர்த்தியாய் முடித்து பின் சிலவருஷத்திற்குள் நிஷ்டைகூடி சமாதியுற்றனர் இப்பொழு[illegible] முருகன் ஆலயத்திற்கு நேர் வடகிழக்கில் தம்பிரான் சமாதி[illegible] பூசிக்கப்பெற்று வருகிறது இவர் முருகன் ஆலயத்தாள் தானே திறக்கிற திருவிளையாடலை ஒரு கீர்த்தனைப்புஸ்தக ரூபமாக்கி வெளியிட்டமொழியில் சொற்குற்றம் பொருள்க்குற்றமிருப்பினும்மேலான மேதாவிகளால் முகவுரை சீர்திருத்தத்துடன் தம்பிரான் ஒரு காவினல் ஆடி ஓடிச்சென்று போட்டேவுடன் இரண்டாவது பதிப்பில் பிரசுரம்செய்து வெளிவரக்கூடும். ஆகையால் வேணும்

ஆறுமுகத்தம்பிரான் துணை சுபம் ,சுபம் சுபம்!

18616

இப்படிக்கு,

எம். சங்கரலிங்கம்.

நூல்

வெண்பா.

ஹரிலக் குமிமருவும் ஐந்தாம் திருப்பதியின்
திருத்தங்கல்ச் க்ஷேத்திரத்தின் தேவாம்ஷர்—பெரியவராம்
ஆறுமுகத்தம்பிரான் ஐயன்மேற் கீதம்
நேருநிரை நேர் நேர் நிரை.

கலி விருத்தம்,

அருளதாகிக் காவடிகொண் டாடிடு மெய்த்தம்பிரான்
உறுமீதேறிப் பழனிபுரியின் வரையிலேகும் எம்பிரான்
ஒருகால்மீது ஒருகால்தூக்கி ஒன்றியாடும் அம்பரன்
இருதிஆதி புஸ்தகத்தை அச்சியற்றிக் காணமேன்

ஐயன்மீர்! நூத்திஎட்டுத்திருப்பதியில் நமது ஐந்தாம் தி[illegible]பதி யாகிய திருத்தங்கல் திவ்ய க்ஷேத்திரமேயாம் இதில் மலையில் சுப்பிர மணியர்கோயில் யெடுப்பித்த ஸ்ரீமத் ஆறுமுகத்தம்பிரான் அவர்கள் காவடி தோளிலிட்டு ஒருகால்மேலே மற்ற ஒருகாலைத் தூக்கிவைத்து மூன்றுநாள் பிரயாணத்தை ஒரேநாளில் செல்லுகிற திருவிளையாடலை ஒருபுஸ்தக ரூபமாக அநேக பாடலை அச்சிடவேண்டிய திருப்பதால் ரூபாய் 50 செல்லும் இந்தச்சிறிய தொகையில் பெரியார் நூலை அச்சு இயற்றுவதால் தங்களால் இயன்ற பொருளுதவி புரிந்து ஆதரிப்பீர் களென மிகவும் வணக்கமாய்க் கூறுகிறேன்.

இப்படிக்கு எட்வர்ட்மித்ரன் ரவி,
சங்கரலிங்க தாசன்.

(விருத்தம்)

மயிலேறி விளையாடு குகனாகு மொருமுகம்
மறைவோதிச் சிவனோடு மகிழாகு மொருமுகம்
பயிலான பரமோடு வரமீயு மொருமுகம்
பவமான மலைமீது விடுவேலு மொருமுகம்
அயில்மேவு அசுரர்கிளை அதமாக்கு மொருமுகம்
அழகான வள்ளியொடு அணைவாகு மொருமுகம்
சயிலே குவேதனே யென்றமுகம் ஆறும்
சங்கரர்லிங்கம் பணிந்த சரஹணபவ ஆறும்

கணராஜா துதி.

பெரும்புகழுக்குமேலாய் பெரும்புகழ் தரவே வேணும்
பிரபலமதற்கு மேலாய் பிரபலமாக வேணும்
கரும்பினு மினியகந்தக் கடவுளைக் காணவேணும்
கசடாக்கல்வி யொன்றைக் கருத்தினிற் கற்கவேணும்
ஒருவரன் நன்மையாக வுகந்தென்முன் உரைக்கவேணும்

உன்னிருதாளைப்போற்றி வுற்றம ஞகவேணும்
அறும்பதம் நன்னூல் நற்பம் ஆசியை தருகவேணும்
ஐங்கரனெந்நாளும் ஆண்டருள் புரியவேணும்

(உள்ளமிகமகிளும் வள்ளிமணுளனே என்ற மெட்டு.)

இராகம் நாட்டை தாளம் ஆதி.

கண்ணிகள்.

1 வாதாவி நாயகனே வந்தென்னைக் காவையா ஸ்ரீசி
வாஸன் மருகனே மெய்யா — என்னைக் காவையா
வாஸன் மருகனே மெய்யா
வாரும் யெந்தனைக் காரும் வுந்தனை
வாவென்றழைத்தேன் நீ வந்துதித்திட — வாதா
2 காரணியும் வல்லபையை தானணியும் தெய்வமே
மகத்வ பௌவ்யமே திகன் சைவமே தக்க
கணேசா எங்கள் தெய்வீகா
சங்கடந் தீர்த்து தற்பதம் சேற்பாய் வாதா
3 பிள்ளையுந்தன் மீதுகவி கள்ளமின்றிப் பாடினேன்
பேளைவயிற்றை நாடினேன் மரை சூடினேன் பேளை
பித்தன் மகனே — சுத்திக்கனியை
தித்திக்கனியே சுவையரிந்திய வாதா
4 கன்றுல் விளாவெரிந்த கார்வண்ணன் மருகனே
காருண்ய சுகர்வுறுவனே மிகவுருகினேன்
காருண்ய சுகர்வுறுவனே
காரண சங்கர் லிங்கமே பாடினேன்
பூரணமுஞ்சிரம் பூவாரஞ் சூடினேன். வாதா

ராஜமன்னு வார்த்தைவேண்டாம் என்ற மெட்டு.

(கண்ணிகள்.)

1 முருகனேவுன் இருபைதா வுருகிப்பாடினேன்
சிவகுமாரனே அருள் முருகனே
2 சிறுவன்தேடிச் சூடுகின்றேன்
தேசிகம் தருவா சிவமகனெனும் முருகனே
3 கைலைவளர் கந்தநாதனே
கண்பார்த்திடுவையா சிவமகனெனும் முருகனே
பயிலும் மரைப்பரமன் சுதனே
பாதுகாவையா சிவமகனெனும் முருகனே
4 சாபச்சிங்கச் சரஹணபவா
சண்முககுகா சிவமகனெனும் முருகா
சிரம்மணிமுடி சங்கார் லிங்கம்
தேவகானமே சிவமகனெனும் முருகனே

பூமலர்மேல்த் தாவிநிற்கும் என்ற மெட்டு.

பல்லவி.

1 ஆனைமுக னுக்கிளைய ஞானகுகனே
தெய்வாதி ஞானகுகனே தெய் ஞான ஆனை

அநுபல்லவி.

2 மானையிருபாகம் வைத்தீர் மாதவனே யான் துதித்தேன்
மாம்பழனிப்பதி ஆண்டவனைத்துதி
காம்பழகித்ததி வேண்டிய சித்தாதி ஆனை
3 காமதிருநீரணிந்த நாவலக்கறுவே
சேமாதி நாவலக்கறுவே சே நா
பூமணமும் தேன் கமழும்
பூசாபிசேகர் தொழும்
புவிக்கரனையே போற்றினேன் நேற்றியா
மயில்க்கடவுளை வாகென மூசிக ஆனை
4 சண்டனையகற்றுங்கர தண்டபாணியே
நீதாதி தண்டபாணியே நீதாதி தண்டபாணியே
மண்டலத்தில் மானிடரும் மர்மமற்ற தானிகரும்
மாக்ஷிமைதங்கியநம் திருத்தங்கலில்
சாக்ஷியாவோங்கிய அன்பருக்கின்புரு ஆனை
5 நீலமயிலேறிவரும் வேல்கரத்தோனே
சுடர்வடி வேல்கரத்தோனே சு வே
ஆலமுண்டோன் தன்மகனே ஆண்டவனே ஆறுமுகனே
ஐங்கரனைப்பணி சங்கரலிங்கமே
மங்களவில்த்தொனி இங்கிந்தமும்மத யானை

அமரக்குமர என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 சிவனருளிய குகனறுமுக தேஸா வாஸா
சிருவனிக்கண அரியதற்பண நேஸா போஸா
பவமகற்றிய பாலனே பக்தனுக்கனுகூலனே
பரமதயா ஸமரர்ஜெயா
பயிலும் ஒபிலும் கைலையுரையும் சிவ
2 புவனமெங்கினும் தனையன் செந்தமிள் பூதி ஒதி
புகுத்த பூச்சரம்·தொகுத்த ஆச்சர்ய சோதி நீதி
தவத்தினைப் புனமா வினையுண்டா
தத்தித்தோம் நிற்தனத்தாடிய நின்றுய்
தவத்தெழுந்தே சிவக்கொழுந்தே
தார்கடம்ப மார்பனிங்கு சிவ

34 சேவடியைத் திரு காவுக்கரசென்றே
துதித்தேன் பதித்தேன்
செந்தமிழைத்தரு பாவைப்பெர இன்றே
மதித்தேன் புசித்தேன்
காவடியையொரு தோளினில் தூக்கி
கந்தனை யின்புறத் தேடியே நோக்கி
கம்பீரமாக தம்பிரான் யேக
கற்பூரவற்புத விற்பனகற் தெளவ்ய சிவ
சங்கீத முத்தமிள் சக்ரவர்த்தியெனும் சாமி தேமி
சங்காலிங்கத்தின் சொற்குருவாகிய நேமி பூமி
சத்துசித்தானந்த வித்துவே நீயே
பத்திநித் யானந்த தத்வாதி சேயே
...ல்ம்ருதங்கத் தொனியலங்கிர்தத்
...திரு கைலையின்சதா சிவ

செந்தாளம்பூந் தேன்கமளும் என்ற மெட்டு.

பல்லவி.

1 மங்ரானந்தா கந்தா வடிவேல்
மலையில்வாள்சிவ சண்முகா மங்ரா

அனுபல்லவி.

2 இந்திராதியர்பணியும் ஈரார்கரத்தணியும்
இலக்கு வேலுடன் அலங்கிர்தத்துடன்
துலக்கு சேவலை நலங்கொண்டோமென்ற மங்

[சரணம்]

3 சுத்தா கர்த்தா சித்தா மெத்தவும்
நித்யமா யெனையாண்டருள்
உற்றுருரவினர்கள் செத்தா லவருதவார்
இத்தருணந்தனில் மெத்தவும் நத்தினேன்
புத்திவுயற்றிடச் சித்தம் வைத்தாண்டருள் ம

கண்ணிகள்

4 கமுகிளநீர் குமுகுமென சாஞ்சாமலையோரமா
யமுனைநதி நீர்பெருக கயல்மீனினந்தான்தருக
காரபோல காரணபோல்யிவ்வூரணியோரமே
நீரணிஆர்முகன் பேரைக்கொண்டாடிய மங்

இதுவுமது.

5 ஊர்பேர் திரு நாடுகேகர் உற்றதை யெடுத்தோதினேன்
பாரும் விண்ணும் ஆதியாய் படர்ந்ததே முருகவாக்கியம்
சேருங்கதிபெற ஓது நிதிபெற
பூதியணிசிவ சங்கரலிங்கமன் மங்காதியபூனின்

வாவா கஜமுகனே என்ற மெட்டு.

பல்லவி.

1 நீவா திருமலையனே நீதிமெய்யனே நீவா

அனுபல்லவி.

2 நீவா திருமலையா நீமயில் மீதிலேவா நீவா

சரணம்.

3 முன்முப்புரம் யெரித்து வுங்கப்பரை தரித்து
மூக்கண்மகன் முருகா சிக்கென்றுனை பிடித்தேன்
மூந்தவந்து யெந்தனைக்கார்
சிந்தைனைத் துரிகிடாமல் நீ வா

[இதுவுமது]

4 மண்டுளாடும் மணியைக் கண்டு பி ந்தணிய
பண்டுபவமகல இன்று வுனைப்பணிய
மாமரைச் சங்கரலிங்கம்
சோமகனென அருள நீவா

தென்பரங்கிரியில் வளர் என்ற மெட்டு.

பல்லவி.

1 அருளுக் கருணைத் தருவா திருத்தங்கலின்
ஆறுமுகனே வருவா அருளுக்

அனுபல்லவி.

2 முரசு யெக்காளம் வாங்கா முன்னேவாத்தியம் பாங்கா
குறைவின்றி பம்பம்பென்றே குகனே யெனக்கரு
3 தங்கநிறச் சண்முகா தம்பூர் வீணை முன்புவா
துங்கமயில் மீதேரிவா துதித்தேன் தேவா அருளுக்
4 ஆளிருஞுலகத்தை அசகோடி வந்தேநின்ற
வாளிஆசு முன்வுன்சிந்தை வரமேயீன்றே அருளுக்
5 வனிதயர்மயகத்தை வச்ரவாள் கொண்டறுத்து
இனியுந்தன் சுதிலயத்தை ஈவாவரத்தின் அருளு
6 பழனிவாள் முருகனே பைந்தமிள் வொருவனே
களனிருள் குருபரனே கன்னன்வசனே அருளு
7 சங்கரலிங்கனே தமிழ்க்கருள்தங்கும் கோனே
திங்கள்குலத்தில் வந்தேனே தேவதேவனே அருளு

மாரன் வாதையினுல் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 வெற்றிவேல் முருகா உன்னை
வேண்டினேன் ஆண்டருள் தாண்டவனின்சேயே வெ

2 வீரமணி தாவடத்தை பூரணமதாயணிந்த வெ
3 விண்ணவர் நண்ணியபாதா கண்மணி யேசன் முகனே வெ
4 விடமுடியாதனதிடபதம் கடகரிவரமனதிடைகினை வெ
5 வில் வேல் வாள் கெதை சக்கரம்
எல்மோனைக் கார்த்திடிக்கணம் வெ
6 விப்பம் தங்கிய மயில்மிசை
பம்பம்பெண விடுவேலுடன் வெ
7 வீரசண்டனையுதைத்த
ஈஸ்வரமகனாவுதித்த வெ

அனுகண்ணிகள்.

8 அட்டதிசைபோற்றும் எட்லர்ட் மன்மைந்தரை
[illegible] ர்த்து இரட்சிக்க யான்தேற்றும்
[illegible] மாற்றும்
துணை [illegible] லித்துதி சாற்றும்

(மகுடம்.)

அடருட சுடர்மணியேமர
கதமென வருதனி காசல
அணவரத சற்கரைப் பொங்கல்
மலைமகிளுரு திருத்தங்கல்
அன்பர் சனம் யின்பமுர
சற்காலிங்கம் நம்பிய வரன் வெற்றி

மேதினியில் மானிடராய் பிரந்தோர் என்றமெட்டு.

கண்ணிகள்.

1 மாமலையின் வாழும் முருகேசா மயிலுல்லாசா
வள்ளி நேசா தினமும்
வந்தெனக்கருள்புரியும் ஈசா இந்ர
வானவர்களுந் துதிசெய் மேனவனா நின்றபரம்
பொருளே வரம் அருளே மாமலை
2 ஆலியிற் துயின்றோன் மருகோனே
முருகோனே வுன்னைத்தானே தினமும்
அன்புடன் துதிபடித்தேன் நானே திரு
ஆத்திமலர் பூத்தமல்லி கார்த்திகாவுன் பாதங்கண்டு
பணிவேன் நாளும் அணிவேன் மாம
3 வேங்கைமரமாகி வள்ளிமுன்னால் நின்றாய்
அன்னாள் உன்னையின்றாள் துதி
வேண்டியேதுதி படித்தேன் தன்னால் அன்று
வேடரூபமாகிநின்று காடதனில் லேமுரைத்த
ஐயையே பாடும் மையே மாமலை

4 சண்டனை முன்னாள் வுதைத்தோன் கனியே
ஞானப்பணியே சுப்ரமணியே வுந்தன்
சரணாகதியடைந்தேன் இனியே ரவி
சங்கரலிங்கம் பணிந்தேன்
மங்களம்சீர் மைந்தனை முன்
சாரும் ஜார்ஜைக்காரும் மாமலை

திருக்கொன்றை தரிக்கும் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 திருத்தங்கல் மலைக்கந்த குகச்சிந்தை எனக்கிந்த
வாசிதா செக பூசிதா அருள்த்
தேசுலாவிய பூசைமேவிய
ஆசுகாவிய ஓசைதாவிய
தெய்வமே மகிள்ந்துய்வமே
2 அருள்ப் பொங்கப் பொருள்த்தங்க
கொடிக்கிந்த உறுக் கொண்ட
வாசனே வள்ளி நேசனே என்னை
ஆண்டருள்புரி வேண்டினேன் நதி
துண்டருஞ்சுடர் தாண்டவன்பதி
தருவாயே என்முன் வருவாயே திரு
3 மருக்கொன்றை தரைக்கின்றான்
மகள்க்கென்று உறுக்கொண்ட
அய்யனே ஈரார்கையனே ஈஸர்
மானதத்தினி லேவுதித்தனை
பாசவேதபூ லோகசித்தனே
வாக்கருள் உந்தன் சோக்குடன் திரு
4 சுடர்கொண்ட சிவசிந்தை
அடர்தந்த பவம்வென்ற
அறுமுகா பன்னீர்கரகுகா சுதன்
சொல்லும் சங்கரர் லிங்கம் செந்தமிழ்
நல்கி ஐங்கரன் எங்குங்கந்தனின்
திருவாயே கல்வி தருவாயே திரு

வாவா கஜமுகனே நீ என்ற மெட்டு,

பல்லவி.

1 ஆறுமுகனே குகனே மயிலின்மிசை
வாரும் சிவனின் மகனே ஆறுமுகனே

அனுபல்லவி.

2 ஆறுமுகருகனே வேலும்மயிலுடனே ஆ

சரணம்.

3 தாருப்வுனதருளைக் கோரும் அடியன்வினை

தூரும் எனதிருளை நீறும்படியருள் செய்
தங்கமய மானசிவ கங்காதர சீலநய ஆறு

கண்ணிகள்.

4 வேதமறையுணர்ந்த ஆதாரமான சொந்த
பாதாரங்கண்டு வந்த தாதா மலையமர்ந்த
வேலாயுதக் கடவுள் காவில்சங்கரன்வுரை ஆறு

கழுகுமாமலை வளர் முருகையனே என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 ஆதிசந்திர சூரியப்பிர்மமே நம்மை ஆள்வதற்கு
ஆட்சர்யமிரும் மாக்ஷிமை தெய்வமே தவ
[illegible] வரிந்தனே
[illegible] ஆதி
ஊதிய[illegible] தருவாய் அரஹரசிவ
உனதுபாதமேகதியென விரைவாய் குடை
உற்றவேல்ஸ்சுமன் நித்யமாகயென்
பெற்ற தந்தைதாய் சுற்றமும்நீதான் ஆதி
3 யவ்வேணும்வுயிர் சிவ்வெனவுதித்தீர் யந்திரமாரனே
யான்பணிந்திட நீதிடமுடனே திகள்
யாகனே பிர்ம யோகனே வளர்
ஆதவாமதி நீதமாகவிண் ஆ
4 வன்னிவடிவம் வுன்னிடயிதம் வளர்ந்தகோர
வாய்வுதேய்வு மண்விண் அப்புமா ஜார்சு
வாள்க அன்னையின் மேரி அம்மைதன்
மாவுலகினில் நான்பணிந்திடு ஆதி
5 கனியேகாம்பரக் கடவுளைப்பணிவேன் கருணையோங்க
கனிந்துருகிய காருண்யப் பொருளே ரவி
கன்னச்சங்கர லிங்கமுத்தமிள்
மன்னைக் கார்த்திட வந்திடத்ததி ஆதி

உள்ளம் மிகமகிளும் வள்ளிமணாளனே என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 அய்யா திருமலையா மெய்யாகவுந்தனை
அண்டியே யிங்கு வந்தனே ஒ கந்தனே
அண்டியே இங்கு வந்தனே
அத்தனே மெய்யா கர்த்தனே துய்யா
சித்தமளித்திடும் வுத்தமனேமெய் அய்
2 உருவே ஞானதிருவே அருமறை யேற்றிடும்
கர்ம வினையகற்றிடும் கடத்தேற்றிடும்

கர்ம வினையகற்றிடும்
உன்னையல்லாது பிலனே வேறேது
பன்னக பரணன் தன்சுதனை அய்யா
3 தங்கிவருகிறவர்க் கிங்கிதமாகவே
பங்கிலிருந்துரை செய்வாய் மிகவுய்குவாய் —பங்
தாரணியெங்கும் பேரணிந்தவா
நீரணி நெத்தியும் வேலணியுமுரு — வையா
4 தேரோடும் வீதியிது தெய்வீகப் பூமியே
செந்தமிழோவோதும் சாமியே புகழ்நேமியே—செக்
சேயனித்தகி சங்கரலிங்கம்
ஞாயமுத்தமிள் ஐங்கரன் தம்பியே அய்ய

ஆனந்தக்களிப்பு.

1 ஆனந்தமான திருத்தங்கல் ...
ஐய்யன் திருக்கோயில் அனுதினமும ...
நானென்ற ஆணவம்விட்டே எந்த
நாளும்பணிகுவர் வேணவரந்தோட்டே
தானுத நாதந்த தானன தானே ஆனந்த
2 வெள்ளியும செவ்வாயும நீரு கையால்
அள்ளியே தருகின்ற வொய்யாரப்பாரு
கள்ளிக்குடி யென்றுவூரு தன்னில்
காணிக்கை கடவுளற்க வருகிறதைப்பாரு தா
3 மண்டலத்தில் முருகன்போலே யான்
கண்டதும்யில்லை தேவிண்டேனப்பாலே
சண்டணணுகாதுமண் மேலே கந்தனைச்
சரணடைந்தாற்போதும் பொருப்பாரப்பாலே தா
4 படித்திட்டேன் சங்காலிங்கம் இவர்
கொடுத்திட்டார் நேர்த்தியாய் ஆதிசிவலிங்கம்
அடுத்திட்டேன் சிவயோக பொங்கம் அன்பாய்
அரஹரா ஆதியின் அருள்பெற்று எங்கும் தா

நடராஜ பூபதியே—என்ற மெட்டு

(கண்ணிகள்.)

1 ஆறுமுகத் தெய்வமே—அன்புடனென்னைக்
காரும்மகச் சைவமே—தந்து
அரன்மகனேவுன — தடியிணைப்பணிந்
திடுமடியவர்க்கு — விரைவுடனேகையி
லாயவரம் அருள்வாய் — சரணமென்ற
சேயனின் தன்குருவாய் —ஆறு
2 ஊனுடல் தசையும் பொய்யே—உற்றவரீயே
தேனுடன் பாலும் மெய்யே—பருகி

உறுப்படுத்துவ — திருப்பழனியில்
விருப்பத்துடன்மரக் —!திருக்கும்ஆண்டவர்
உள்ளபொருளைக் கோரினேன்—உனதுபாதம்
நித்யமெனவே நாடினேன் —ஆறு

3 தங்கக்கா வடிகொண்டவா — சங்கரர்சுதா
துங்கத்தேரடி சொந்தமா — இனிய
தரணிமகிழவே — பரமதிருவருள்
உருகிவுனதொரு — கருவில்நடமிடு
தண்டைசதங்கை கலீரென—ஒலியுடனே
நின்றபதங்கள் பழிரென —ஆறு

4 மாற்றுரைத் தங்கத்துரவே—வடிவேலனே
காத்திடத் திங்கள்வரனே —தந்து
...யில் — மீதினில்வந்து
...கூடன்நின்று
...—சங்கரலிங்கம்
போற்றும் துணைவரமே —ஆறு

வாருமே தோகைமாமயில்மீது வந்துகாருமே —
என்ற மெட்டு.

பல்லவி!

1 காருமே — கைலாய சிவசண்முகா — வாருமே கா

(அநுபல்லவி.)

2 கானில் வள்ளியுடன்—தேன்தினை மாவுண்டாய் கா

(சரணம்.)

3 முருகாஷண்முகா—தெய்வயானை—முனைவேலுடன்
நன்குகா—முருகசண்முகா—ஆதி
முத்தியகஸ்தியர் — சுத்தமகத்வம்
சித்தியளித்தகா — புத்தகத்தில்வந்து காருமே

4 வேதநாயகா —வினை- தீருமென் றுனைப்பணிந்தேன் நாயகா
முன்— வேங்கைமரமாகநின்ற பூங்கடப்ப மார்பனே
வேண்டித் துதித்தேன் நாளும்—எனைக் காரு

5 அய்யனே —திருத்— தக்கல்மலையில்வளர்—துய்யனே
சதா— ஆதாரம்—பாதாரம்—அன்பன் சங்கரலிங்கம்
அண்டிவந்தேன் சிந்தைமெய்யனே—நிதம் காரு

நாகூர் ஆண்டவா—என்ற மெட்டு.

(பல்லவி)

1 வாவடி வேல்முருகா—காவடி வேல்முருகா

நீவடிவேல் தினம் வாவடிவேல்

(அநுபல்லவி.)

2 திரு— மால்மருகா நீகுருவா வாவடிவேல்

(சரணம்.)

3 பழநிமலைவாஸா | பக்தர்களுல்லாஸா
களநிநிறைதேஸா — காத்தருள்வீர்ஆஸா
பங்கயன்சிரம்தகற்த சங்கரர்சுதாகாரும்
ஐங்கரர் தனக்குமூத்த புங்கவா திருசேரும்

(முடுகு)

அருமாமறை முறைதந்தவுன்
வரமேதிரை புடன்முந்தவே வா

(இதுவுமது.)

4 பண்டாரமான பர
கொண்டாடக்கூனக் கு
பாலரூபமாகிவந்தீர் பழனிமாமலைம்தினில்சேரும்
ஆலவிடமுண்டசிவனுக் கன்றுபிரணவமோதிநீர்

(முடுகு.)

மாதாபிதா நீயல்லாது
போகாசதா தீதில்லாது வாவடி

(இதுவுமது.)

5 அண்டர்துயர் தீர்க்கும் ஆகமமுண்டாக்கும்
மிண்டர்விளி போக்கும் மிடியதனைநீக்கும்
அத்திரி முனிவர்போற்றும் ஆர்முகா ஈரார்கரா
சத்தியம்நின்றுவாழ்த்தும் ஜார்ஜைக்காரும்வேல்ஜைகா

(முடுகு.)

நவமணிமுடி சங்கரலிங்கம்
துகள்பிணிமிடி போக்கிய சிங்கம் வாவடி

பாண்டியன் ஈன்றமீனுக்ஷி—என்றமெட்டு.

(பல்லவி.)

1 திருத்தங்கல் மலையில்வா மையனே—தேசிகம்
தேடிவந்தேன் மெய்யனே
விருத்தங்கள் சிலையில்வேல் துய்யனே—வேல்ஸ்மன்
வேண்டிப்பணியும் பௌவ்யனே திரு

(தொகையறு.)

2 ஆறுமுகத தம்பிரான் அரிசிகுக்க வஸ்த்தையால்
ஆண்டவன் பாதம்வந்தால்;—
அபயங்கொடுத்திட அப்பிணி நீக்கியே
அருள்பிர சாதமுந்தந்தீர்:—

(பல்லவி மாதிரி.)

3 ஐயனே துய்யனே போகா—நஞ்சீதா
அடியேனுக் கருள்தாதா

(பல்லவி.)

4 கந்தனே யெந்தனைக்காரும்—நற்பேரும்
கவலைதீர்த்தாளும்
சிந்தனை வந்தனைசேரும்—சிற்றேரும்
சிவனைத்துதிப்பாரும் திரு

(தோஹையரு.)

5 ஒருகாலி னாலோடி திருசேரும் தம்பிரான்
உன்வாயல் கொண்டுவரவே;-
...வடி அருளாகி யெப்பிரான்
...கரவே:—

(...லவி மாதிரி.)

6 சிங்குவைத்தரித்து முன்வைத்தே—மனத்தே
தேரித்தெளித்தவித்தே திரு

7 ஈரவதுவளர்த்தேகாக்ஷி—பேக்ஷி
நளினப்ரகாஸ குட்சி
ஆவின்பலாபிஷேக மாக்ஷி—அன்பாக்ஷி
அனைவர் பணியும் சிர்க்ஷி திரு

(தோஹையரு.)

8 மலையிற்வளர் மன்னனே மாசிவன் மைந்தனே
மனமகிழ்ந்து பாடுகிறேன்
நிலையில்லா யாக்கையை நிலைத்துச் சொரூபமா
நின்றவியர் தேவகந்தன்:—

(பல்லவி மாதிரி.)

9 நிற்குணநின் மலாங்கண்டேன்—மன்விண்டேன்
நினதுபாதாரங் கொண்டேன் திரு

(பல்லவி.)

10 சித்திரமா மயிலுடன்வருவா—என்குருவா
சித்தர் துதிக்குந்திருவா
உத்தமா வொயிலுடன் வருவா—மன்பெருமான்
உத்தரம்துதிக்கும்கிருபா திரு

[தோஹையரு.]

11 ஐங்கரன் தம்பிநீர் ஆனையை எம்பினீர்
ஆலோல வள்ளிகணவா;-
உங்கர மீராறு திருவிளை பன்னிரென்
டோலமிடடேன் நம்துணைவா:—

(பல்லவி மாதிரி)

12 தாரணி சம்பன்னர் அங்கம்—சடாக்ஷா
நீரணி சங்கரலிங்கம் திரு

காந்திமஹான் போலுண்டோ—என்ற மெட்டு.

பல்லவி.

1 மூன்று லட்சம் காவடிக்கு
முதற்காவடி திருச்சேவடி அருள்தேடி புவன மூன்று

அநுபல்லவி.

2 பூந்தடஞ் சூழும்—புண்யபுவி நாளும்—தினம்
புகழுமிந்திய தேசம் புஷ்ப வாசம்
தெய்வ நேசம் கண்...
போற்றுமன் பர்கள்ப...
சாற்றுமின் புருக்ஷேத்ரம்—...
பூபாலர்கள் பாவானர்கள்
நாவானுயர் தேவாமறை
புத்திக்கொரு முத்தைத்தரு
வித்தைக்குரு சித்தைப்பெரு மூன்று

இதுவுமது.

3 ஆண்டவன் பாதம் வேண்டினேன் கீதம்
ஆரணம்சொல்லும் வேதன் பணிகிதன் ஆதிபாதன் இதில்
ஆங்கிலேயரின் சோக்கே தர்மர்
ஓங்கியசெல்வம் நோக்கே பெற
ஆதாரமே பூதானமே நீதாயென நான்பாடினேன்
அங்கத்தினர் திங்கள்ச்சுடர்
சிங்கக்கொடி தங்கப்படி மூன்று

இதுவுமது.

4 சத்திவடிவேலா—தர்மவேல்ஸ்ஸ்லீகா சதா
தாஸன்தாய் குயின்மேரி பாலன்தேரி
பாடல் கூறி தந்தை
ஜார்ஜின் நித்யம் வாழ்க—சிந்தை
வேல்ஸின் மித்திரன்யோகத்—திருத்
தங்கல்ப்பதி துங்கத்துதி
திங்கள்க்கதி இங்கிலீஷ்மதி
தருணம் நலம்பெறவே—அந்த
கருணம் கலைதரவே—இந்த
சங்கம்திகள் சிவசங்கர
லிங்கம்புகழ் ஜெயமங்கள மூன்று

ராஜாவிசு வாசலாலா—என்றமெட்டு.

பல்லவி.

1 அரஹர தண்டபாணி அருள்புரிவா, எனக்
கருள்புரிவா எனக் கருள்புரிவா அ

அநுபல்லவி.

2 புரமெரித் தோன்சுதனே புலவர்பணி நீதனே அ

தொகையறு:

3 தாள்பூட்டி ஆலயம் தானே திறக்கின்ற
தம்பிரான் ஆறுமுகத்தேவன்—
தங்கையும் தானுமாக காவடி ஒன்றிலே
தாவியொரு சாண்டயரவே—

மகுடம்.

மேட்டிமை யாகவே
க லகள்தள் ளாடவே

பல்லவி மாதிரி.

5 கள்ளற்கு கண்தெரியா தமைத்தீர் அப்போ
தேயமைத்தீர் அப்போ தேயமைத்தீர் அரஹர

பல்லவி.

6 கள்ளர் வணங்கிநிற்க கண்விழியேஜொலிக்க
கட்டிமட முடித்த காரணமே பரி
பூரணமே திரு நீர்முனமே அரஹர

தொகையறு.

7 மாணிபம் காணிக்கை மடமும் மியற்றிட
மகிழ்வர மீன்றபொருளே—
மத்தள மோர்சங்கு துத்தாரி டம்மாரம்
மாக்ஷிமை தந்தஅருளே—

மகுடம்.

8 மனுமுறைதவரா மன்மன்மன்னவர்
தனியியலரசு தன்தன்தன்னகர்

பல்லவி மாதிரி.

9 மகுடமுடி லண்டனில்
மன்னர் நீடூழிவாழி — ம-நீ ம-நீ அ

பல்லவி.

10 வாசிமௌனத் தெய்வம் வரன்தந்தால் வானிலுய்வம்
ஆசுக்கு ஆசுநின்றுள் அருட்பிரசாதத்தை தந்தாள் அ

தொகையறு.

11 பத்துலச் சங்கோடி நிற்புதம் கற்பகம்
பகர்ந்தயின் பண்பின்மணியே—
உன்றமிச் சந்தேடி அற்புதம் புஸ்தகம்

உயர்புகழ் அன்பின்மணியே—

மகுடம்.

12 படஅரவினை சிவனருள்பாலா
மடைதிறந்திடுபத குகனெனும்வேலா

பல்லவி மாதிரி.

பழநிப்பண்டாரம் பாதம்
பனிசங்கரலிங்கக் கீதம் அரஹர

இலங்குசெம்பொன்—என்றமெட்டு

கண்ணிகள்.

1 நவமணி முடிஓராறு ஜொலிதர
நம்நாராயணன் மருகன்
நற்திருதங்கல் முருகன் [illegible]
2 நற்பொருளைப்பணி அற்புதகற்ப[illegible]ராயணன்மருகன்
நற்றிருத்தங்கல் முருகன் நம்மாதிபாதன் நற்றிரு
3 நறுநறுநறுமண முயர்குலதிருவுடன் நம்நாராயணன்மருகன்
நற்றிருத்தங்கல் முருகன் நம்மாதிபாதப் நற்றிரு

முடுகு.

4 நற்பழனிப்பதி முப்பழஅற்பண
தற்பணவித்தி மத்தளநற்பமென்
அற்புதனைப்பணி சங்காலிங்கமன்
சொற்றிரவேல்ஸ சுதந்தரயிந்தியன்
தன்னைக்கார்த் தென்னையாளுமே ததானந்தத்தின்
கன்னர்க் கோத்திரம் பூணுமே நவமணி

ஆண்டிப்பண்டாரம்—என்றமெட்டு

கண்ணிகள்.

1 கார்த்திகைமுருகா உன்னை போற்றினேன் வருவாய் கா
2 நாற்றிசையோர் கொண்டாட நாதனேதங்கூட
வாத்திய முழக்கமொரு வானவர்கதிருந்திரு கா
3 மயில்வா கனக்கடவுள் வரந்தருவையாபுரியா
ஒயிலாக வேல்பிடித்து ஓடிவந்துகார்க்குந்திரு கா
4 தெய்வானை வள்ளியுடன் தேரோடு வீதிஇடன்
கைலாயத்தில் வளர்ந்த காருண்யக் குருவேதிரு கா
5 மால்மருகா வேல்முருகா மாதமொரு முறைவருவாய்
பால்பழத்தோடேகுருவா பாகுவைப் படைத்தேன்குரு கா
6 பாலாபிஷேகஅங்கம் பரமசிவ னீன்றதங்கம்
மேலாம் பழநிச்சிங்கம் மேலக்கோட்டை சங்காலிங்கம் கா

7 இடும்பன் கடம்பனுடன் எல்மோனின்ற திடன்
அடும்போர் அகத்தைவென்ற ஆறுமுகனுதி கந்தாக் கா
8 செஞ்சேவற் கொடிபிடித்தீர் செங்காத்தில் வேல்பிடித்தீர்
பஞ்சாமிர்த பாகமைத்தீர் பாவலனே யான்பூஜித்தேன் கா

பாஸ்கரன் பணியனன்மை தருவாயே—என்றமெட்டு

கண்ணிகள்.

1 தண்டபாணி யாகவந்த தம்பிரானே—என்றும்
தங்கிடும்திருத் தங்கலின் யெம்பிரானே தண்ட
2 அண்டர்முதற் தொண்டர்போற்றும்
எண்டிசையோர் நின்றேயேற்றும்
[illegible]மாவே மண்டலம் புகழ்பெறவே தண்
[illegible] ஆண்டிப் பெருமான்
கு[illegible] வேண்டிப்பணிந்தேன்
நன்றுதீதை வென்றிடவே நல்வரம் நீதந்திடவே
என்றும்சிந்தனை வுந்தன்மீது தந்துகந்து யான்பணியும் த
4 சந்திரனே செஞ்சடையில் வைத்தோன் மகனே
சண்முக சடாக்ஷானே நித்தன் சுதனே
இந்திரனும் கந்திருவர் உந்தன்திரு வடிபணிய
சுந்தரத்தி லேமிகுந்த நிந்திரத்தை யான்செபித்தேன்
5 ஞானசிவ தேசிகனே நம்பினேனே—ஜெக
நாதாபவ மகற்று மும் பரகோனே
மோனவா சிவாசிவாவென் றேனே சிந்தை ஆசுமேனே
ஆனைமுகன் தம்பியோனே ஆறுமுகமே சிமானே த
6 அன்பகளுக் கன்பாதி அருளாளி தேஸஸ்
அங்கம் சுடர்ப் பிரகா சத்திருமேனி
தம்பனக் குளிகைசாவா சங்காலிங்கம் குருவா
இங்கெனக்கு நீயல்லாது யாருகதி ஓதிப்போது தண்

கணமுதலே—என்றமெட்டு.

கண்ணிகள்.

1 முருகசிவா ஓ முருகசிவா ஆ முருகசிவா ஊ முருக
2 முடிநவமணி சிரமதிலணி கிரவருமுக சரஹணபவ மு
3 முத்தாபரணனே வரதனே சித்தாசமரஸா சுதனே
முரஹரிமருகனே வுயர்தவ திரமுடனுருக் செபித்திடுகுக மு
4 முனைந்த வசுரனை யிதமுடன் சிதைந்து விளம்படி அரநொடி
புகுந்துநெர நெரநெரவென தகுந்தபடிமிக வதைசெய்த
மூர்த்தியே காத்திர குளகனே
கார்த்திகை நீற்றணி வளகனே முரு

அநுகண்ணிகள்.

5 தருநிறையுந் திருத்தங்கல் மீதமர்ந்தா
தம்பிரான் காவடிதன் மீதிலுகந்தா
வருவினை தன்னையே மாற்றியேமகிழ்ந்தா
வம்பன்கடம்பன் யிடும்பன்தன் சுகந்தா
மயில்வாகன குறமாதுடன்
மகிழ்லீலையில் திரமோகனன்
வரவரவர வரனைதந்து அரகரகர குகனேயெந்தன் முரு

6 சந்தச்சரபச் சசிவர்னரூபமே
சங்கிதமுத்தமிழ் தந்திடும்சிவமே
சிந்தைக்கினித்திட பாவருள்நயமே
சிங்காரச்சங்கார் லிங்கத்தின்வர
சரிகம பதநிச
மகரிச ரிகமப தநிசரி
தாண்டவ மாடியோன்—சேயனே
பாண்டவர் தேடுயர்—சகாயனே
தத்தனூர்மத்தளத்தின்தொனி
முத்தாரவித்தாரசுப்ரமணி முருகே

ஷண்முகா ஏழை என்மேல் தயவில்லையா—என்றமெட்டு

1 ஆர்முகா அடியேனைவந் தாண்டருள்வீர் ஆ
2 ஆண்டருள் வேண்டினதால் ஆண்டருள்வீர் ஆ
3 அனுதினமுன தடிதன தினந்தினம் பணிந்திடும்
அடியனை ஆண்டருள்வீர் ஆ
4 அவுனர்கள் அரகொடிதரைவிளை ஜெயமுன
திருவடி நிதந்தொழ ஆ
5 அந்தரவாசியோர் துந்துமிசந்ததம் நின்றுமுளக்கிட
அரஹரசிவமய தயவொருபயனுர ரிஷியோர்கள்
மகிழ்ந்திட ஆண்டருள்வீர் ஆ
6 அருட்கடலே உறுக்கிநிதம் வருக்கையுடன்
தருக்கமள அலேகடலுலகினில் கடம்பணிமலேமீது
விடுவேணிவாதனே ஆண்டருள்வீர் ஆ

அநுகண்ணிகள்.

7 மேற்விலக்கிரிவலமா மேவியேவந்தரிபெலமா
சூர்மயூரநலமா சோபிதத் திருத்தங்கல் குன்றுமா
மோனகை யூர்வசியாடிட மேற்கோட்டை யோன்தேடிட
தூனவசூரர்கள் வாடிட சங்கரலிங்கம்பாடிட
மேதகுநீதமதாக ஓதியசீலர்ஜங்கீதமே
போதகஓம் பிரணவத்தனே சாதாகபூதியின்கந்தனே
மிடிபொடிபட சரவணதனிற் பொரிசுடரொளி பாவியக

ஆண்டருள்வீர்   ஆ

ஆர்முகாகண்பார்குகா—என்றமெட்டு

கண்ணிகள்.

1 ஈராரகரா வேராரார்சிரா இந்திரன்மகளை முந்திமணங்கொண்ட

கண்ணிகள்.

2 பாரோர் துதிக்கும்பாலா பழனிக்குமாரவேலா
சீரார் திருத் தங்கலின்சீலா
சித்தம்வைத் தாண்டிடப் பத்திப்பணிந்தேகீ ஈரார

கண்ணிகள்.

3 மலைமீது வேல்விடுத்தா வள்ளியை மணந்தொடுத்தா
கொலையசுரர் தலையடித்தா
... வேலாயுதமேந்தி ரார்

... கள்.

4 பச... பண...ாரச் சிவமகனே
இச்சைகுயிற் கூவததானே
இன்னிசை தந்திடக் கன்னன் பணிந்தேகீ ரார

கண்ணிகள்.

5 செங்காத்திற் சேவற்கொடி திருத்தங்கல்த் தவப்பதி
சங்கரலிங்கத் திருமுடி
சங்கீதமேபாடி மங்களமே கவீ

கண்ணிகள்.

6 சடப்பமலர்த்தானே காவடிதங்குந்தோளேனே
விட்முண்டவன்சுதனே
வேங்கைமரமாக ஓங்கிவளர்ந்தவீ ரார்

பரப்ரமநூலா—என்றமெட்டு

கண்ணிகள்.

1 கார்த்திகைவேலா கங்காதரன்பாலா
மாற்றரை நிக்யலோலா
மரகதமயிலேறி வருவாயிதுததி கார்

2 மூர்த்திபரன்சுதனே மூலமந்ரதாரனே
பூர்த்திபூதிசிரனே
பூமகள்வள்ளிதெய் வானைமணாளனே

3 அகரம்தனைப்பிடித்து பகவன் தனைத்துதித்த
ஆறுமுககுகனே
அரஹரசிவனே அடியவர்மயமே கார்

4 பழம்பெறக்கிரிவந்தா பாலவடிவேகந்தா

பக்திதனிலே வந்தாள்
பாவலனேதெய்வ நாயகனேதிரு காா்
5 சுடர்வடிதேகா சுயம்பிரகாஸா
கடல்படை திரயூகா
கடம்பணிமார்பனே நிதம்பணிவேனுனைக் காா்
6 செஞ்சேவற் கொடியான் திருத்தங்கல் பதியோன்
தஞ்சம்தஞ்சம் வுனதடியவன்
சங்காலிங்கசங் கீதமகிழ்திரு

சூரகுலசம்ஹாரா—என்றமெட்டு

கண்ணிகள்.

1 கொக்கரக்கோ வெனக்கூவும்
கொடியசைத் தாடியுலாவு[illegible]
குமரகுருபரா அமர[illegible]
2 சக்கரதாணின் மருகனு[illegible]கணம
தடதடசிகரடித் தாடியசேடியே கொக்
3 முத்தியைாவா முருகனேதேவா
முத்தமிழைத்தரு சித்தனின்குக்குடம் கொக்
4 தாரகவேலா சாமியின்பாலா
தாவடமார்பமுன் ஞாலணியூகன்முன் கொக்
5 தென்பழனிப்பதி தெண்டாயுதங்கதி
திருத்தங்கல் மலைக்கந்த சுவாமியின் சேவைகொண்டு ()
6 தம்பிரான் தோத்திரம் தழைத்தோங்கு பாத்திரம்
தற்பரகற்பக சண்முகனைச்சுமந்து கொக்
7 மாங்கனிவாங்க மயூரமேதாங்க
மலைவளம் வொருநொடி கிரிவரும் பொழுதினில் ()
8 சரஹணபவனே சடாக்ஷரமந்ரனே
சங்கர லிங்கசங் கீதத் துதியில்நின்று கொக்

திருமால் மருகா முருகா மதுராபுரி—என்ற மெட்டு

1 ஆவின்—பாலாபிசேகனே—மேலாம்பதயூகனே
பாடற்கருள்தருமயூர —னே ஆ
2 கோயிற்—கோலாகலவடி—வேலாயுதக்கடவுள்
கூடற்கோ துக்குமுதாா —னே ஆ
தொகையறா.
3 சரஹண பவவொரு ஓங்காரங் காட்டியே
தவில்முரசு வாத்யமுளங்க—
அரஹரா குகாயென்று ரீங்கார முட்டியே

அகிலரசர் க்ஷேத்ரம்வணங்க—
பல்லவி மாதிரி.

4 தத்திதோமெனதிருந டத்தித்துயிலகு
தம்பிரானே அதிசாதுவே —சுடர்
முத்திக்குள் வந்தபெருந —வந்திற்கதியுலகு
முன்புதானே பிரணவ மோடவீர் ஆ
தொஹையரு.

5 தும்பிமுக ஸங்கரனே தூயசிவ சண்முகனே
தோளிமீ தேற்றிரீடி—
பம்பரம் போலேகினனே பால்யதவ சொல்நயன
பணியாய் மூர்த்தியாடி—
சிங்குவை கட்கத்தால் அமகனம் வெட்பித்த
[illegible] ர்முகத்தம்பிரான் ரவி ஆ
[illegible] பத்தின்
[illegible] அன்பனே. ஆ

பாலாபிஷேக தூலா—என்ற மெட்டு.

பல்லவி.

1 தேனபிசேகதேசா—தெந்தமிழ்தேசிகாவா தேன

அநுபல்லவி.

2 திருக்கருணைக்கடலே—மருக்கமழ்புஷ்பத்தாலே

சரணம்.

3 ஞானமூர்த்தி யானந்தா—நான்மறை பணியும்பாதா
நியானமுற்றே பாடும்சதா—
திருத்தங்கல் மலைபண்பில்—திருத்தமுடனே கொம்பிற் தே
4 தோளிற்மீதிற் காவடியைத்—தூக்கிவந்துன்சேவடியை
கோழியின் சேவர்கொடியை
கோதையரும் ஆடவரும்—கும்பிட்டுஞ் சவிபுரியும் தே
5 ஆறுமுகத்தம்பிரான்கண்—டானந்தங்கொண்டாதியுந்தன்
சீறுபூசிவுன்பதந்தன்
நின்றடந்த தொண்டர்களை—கண்டுபெணிந்த பேரின்ப தே
6 அன்பழகித் தகியில்நின்று—ஐந்தாந்திரு பதியில்வந்து
இன்புறச்சுகிர்தந்—தந்து
ஏகமன தாகமெசுக—நீஸ்வர புதல்வனேசெந் தே
7 இந்திரன் மகள் தெய்வானை—யின்பமுள துணைவுன்னை
மந்திரத்தினலர்ச்சனை
மங்கள வாத்தியமுக—சங்கரனின் சத்தின்கீதத் தே
8 உஞ்சிஇரஞ்சியமலையை—உடைத்தெரிந்தீர் முந்துலைய
வஞ்சியான வள்ளிக்குயிலை
வாதுடனே தேடினே—ஆதியனைத் தாய்பரணின் தே
9 திருவளரும் பூலோகத்தில்—சிவகுமர ஞானமத்தில்

ஒருவராங்கந்தாள்வாசித்தில்
ஓங்காரப் ரணவத்தில்—ரீங்காரப் பஞ்சாமிர்தத் தே

சூரகுலசம்ஹாரா—என்றமெட்டு

1 கூவும்சேவற் கொடியோனே உன்னைக்
கும்பிட்டடி பணிந்தேனானே
குயிலொலிதருகுவா—கோனேசீமானே உன்முன் கூ
2 ஆவின்பா லாபிஷேகா—ஆண்டவன் மகன்சுதா
அமரர்க்கு சமர்கின்ற—குமாரக் குருபரமுன் கூ
3 வேலைக்கரம்பிடித்தா—விபூதிநெத்திபதித்தா
வித்தகனைச் சுத்தமுடன்—நித்தமுந் துதிக்கேங்கிதம்
4 காவடித்தோளா—கடப்பணிமார்
கைலைபின்சிவமக—ன
5 மங்களவாத்யம்— மனுமுறைநீர்
சங்கரலிங்கத்தின்—கீதத்தின் சாஸ்திரம்

———(o)———

நம்பிக்கைகொண் டெல்லோருங்கை—என்றமெட்டு.

1 தங்கத்திருவடி திங்கள்க்கதிரொலி தம்பிரான்கதி எவ த
2 தம்பிரான்கதி—தனே—அன்பினிற்துதி—எ வ
3 காவடிதோளிற் றாக்கி—ஒரு
காலின்மேல் காலினைத் தாக்கி
கங்கணபாதசிலம் பொலிவோசை தங்கும்தெய்வம்தேக்கி அருன் (த
தொகையறு.
முருகா கதியென ஒருகாலி ஞலோடி
மூன்றுநாள் பிரயானத்தை—
அருளாகி வெம்பிரான் திருநாளில் பழனியில்
ஆண்டவ ரிடத்தில்சென்றார்—
அன்பர்க்கிணையிதா வோ இவர்
ஆனந்தமேசிவ சாது
ஐங்கரனைப்பட்ணி சங்கரலிங்கம் அங்கத்தின்கூட மீது தங்க

அம்பிகா உன்மகன் குகன்—என்ற மெட்டு

கண்ணிகள்.

1 தம்பிரான் தன்னை ம்பினே
எம்பிரான் வுன்னை அண்டினேன் தம்
2 தன்மிருந் திருத்தங்கலில் சான்றவர் அருள்த்துதியில்

